பரமக்குடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மழைநீர் மற்றும் கழிவு நீர் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் டீசல் மோட்டார்கள் அடிக்கடி பழுதடைந்து வருவதால் அவ்வப்போது விலைப்புள்ளி கோரி பழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மழை காலம் தொடங்கி விட்டப்படியால் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீர் மற்றும் கழிவு நீரினை அகற்றிட டீசல் மோட்டார்களின் பயன்பாடு அதிகம் தேவைப்படும் நிலை உள்ளது.

எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி டீசல் மோட்டார்களுக்கு அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 2021–2022ம் ஆண்டிற்கு ரூ.1.00இலட்சம் உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி டீசல் மோட்டார்களுக்கு இனவாரியான பழுதுபணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2021–2022ம் ஆண்டிற்கு ரூ.1.00இலட்சம் உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி டீசல் மோட்டார்களுக்கு இனவாரியான பழுதுபணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1405, அனுமதிக்கப்பட்டது.**

</td></tr>
<tr><td>பொருள்–18</td><td>

இந்நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மானிய நிதி 2020–2021ன் கீழ் வார்டு எண்.2 காந்தி நகரில் 12மீ உயரமுள்ள 1இலட்சம் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பிரதான குழாய் அமைக்கும் பணிக்கு (ரூ30.00 இலட்சம்) 15.02.2021 அன்று முதன் முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

<table>
<tr><td>1</td><td>திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்தாரர் பரமக்குடி.</td><td>0.77% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம் .சங்கர் ஒப்பந்தாரர் பரமக்குடி</td><td>0.07% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
</table>

**அலுவலகக்குறிப்பு** –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம்.சங்கர் ஒப்பந்தாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.07% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், திட்டப்பணி அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்

</td></tr>
</table>

| | |
|---|---|
| | நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1406, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–19 | இந்நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மானிய நிதி 2020–2021ன் கீழ் வார்டு எண்.1 புதுநகரில் 12மீ உயரமுள்ள 1இலட்சம் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பிரதான குழாய் அமைக்கும் பணிக்கு (ரூ30.00 இலட்சம்) 15.02.2021 அன்று முதன் முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br><table><tr><td>1</td><td>திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்தாரர் பரமக்குடி.</td><td>0.07% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr><tr><td>2</td><td>திரு.எம் .சங்கர் ஒப்பந்தாரர் பரமக்குடி</td><td>0.77% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம்</td></tr></table><br>**அலுவலகக்குறிப்பு** –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்தாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.07% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>மேலும், திட்டப்பணி அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1407, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–20 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 31.08.2020 அன்று மாலை பெய்த அதிகப்படியான மழைநீர் (133.00மிமீ) நகரின் தாழ்வான பகுதிகளான பொன்னையாபுரம், பாலன்நகர், ஆதிதிராவிடர் காலனி, சந்தைப்பேட்டை விளையாட்டு மைதானம், காட்டுபரமக்குடி, மணிநகர் மற்றும் பொன்னையாபுரம் இரயில்வே சுரங்கப்பாதை ஆகியவற்றில் தேங்கிய மழைநீரால் பொது மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர். எனவே மேற்படி பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரால் பொது மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர். எனவே மேற்படி பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றும் பொருட்டும், தொடர்ச்சியாக மழைபெய்து வருவதன் பாதிப்பினை கருத்தில் கொண்டம், நான்கு டீசல் எஞ்சின்கள் மூலம் மழைநீரை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இஞ்சின் வாடகை, டீசல் வாடகை மற்றும் ஆட்கள் கூலி உட்பட உத்தே மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகள் அவசர அத்தியாவசிய பணிகள் என்பதாலும் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br><br>**தீர்மானம் எண்.1408, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–21 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் 1827 எண்ணம் 40 வாட்ஸ் குழல் விளக்குகளும், 220 எண்ணம் சோடியம் ஆவி விளக்குகளும், 65 வாட்ஸ் சி.எப்.எல். விளக்குகள் 279 எண்ணம், 3 எண்ணம் (30 பல்புகள்) உயர் கோபுர மின் விளக்குகள், 1X24 வாட்ஸ் டி5 விளக்குகள் 124 எண்ணம், 155 எண்ணம் 2X24 மின் சிக்கன விளக்குகளும், 135 எண்ணம் 4X24 மின் சிக்கன விளக்குகளும் ஆக மொத்தம் 2770 எண்ணம் தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு |

| | |
|---|---|
| | வருகின்றது. மேற்படி தெருவிளக்குகளுக்குத் தேவையான உதிரிப் பொருட்கள் அலுவலக இருப்பில் குறைவாக இருக்கும் காரணத்தினால் 2021–2022ம் ஆண்டிற்கு புதிதாக உரிதிப் பொருட்கள் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,90,000/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1409, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–22 | இந்நகராட்சி பகுதியில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021க்கு நகராட்சி பகுதியில் உள்ள பள்ளி கட்டிடங்களில் உள்ள 107 எண்ணம் வாக்குச்சாவடி மையங்களுக்கு வாக்குச்சாவடி எண்கள் எழுதவும், ஒவ்வொரு வாக்குசாவடி மையங்களுக்கும் கூடுதலாக 2 எண்ணம் குழல் விளக்கு வசதி மற்றும் பிளக் பாய்ண்ட் வசதிகள், குடிநீர் வசதிகள், வாக்காளர்கள் வெயிலில் நிற்காத வண்ணம் வெயில் படக்கூடிய மையங்களில் ஷாமியானா பந்தல் வசதிகள் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்களில் பழுதான சாய்வுதளம் புதுப்பித்தல் அல்லது புதிதாக சாய்வு தளம் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஏற்படும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.800000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகள் அமைத்தல் தேர்தல் தொடர்பான முக்கிய பணிகளாக இருப்பதாலும் இப்பணிகளை உரிய காலத்திற்குள் முடிக்கும் பொருட்டும் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டப்பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளவும் மேற்படி பணிகளை இந்நகராட்சியில் பதிவுப் பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எஸ்.சந்திரன் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் மேற்கொண்டத்யையும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் பார்வைக்கு அனுமதி செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1410, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–23 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 தர்மராஜபுரம் காமாட்சி அம்மன் நகர் 3வது தெரு பொதுமக்கள் தங்கள் பகுதி சாலை குண்டும் குளியுமாக இருப்பதால் நடந்து செல்வதற்கே மிகவும் சிரமப்படுவதாகவும் மேலும் மழைக்காலங்களின் அதிகளவில் மழைநீர் தேங்கி குளம் போல் இருப்பதால் தொற்று நோய் பரவக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்றும் அப்பகுதியில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நேரடி ஆய்வின் போது தெரிவித்ததைத் தொடர்ந்து ஆணையாளர் அவர்களின் அறிவுரையின் பேரில் மேற்காணும் காமாட்சி அம்மன் நகர் 3வது குறுக்குத் தெருவில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,90,000/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளலாம்.<br>3.<br>**தீர்மானம் எண்.1411, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–24 | இந்நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள பொதுக்கழிப்பறை நம்ம டாய்லெட் வளாகம் மற்றும் ஐந்துமுனை சந்திப்பில் உள்ள கழிப்பறை ஆகியவற்றில் செப்டிடேங், தளம், கோப்பைகள் மற்றும் கதவுகள் பழுதடைந்து உள்ளதாலும், மோட்டார் பழுதுகள் காரணமாக போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் பொதுமக்கள் மேற்படி கழிப்பறைகளை பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். ODF++ சான்றிதழ் பெறுவதற்கு அனைத்து கழிப்பறைகளும் நல்ல நிலையில் |

செயல்பட்டு வர வேண்டிய சூழ்நிலை உள்ளதால் மேற்படி பழுதடைந்த கழிப்பறைகளை செப்னிட்டு விரைவில் முழு பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு பொது சுகாதாரப்பிரிவின் மூலம் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து மேற்படி பகுதிகளில் உள்ள கழிப்பறைகளை மராமத்து செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். மேற்படி ODF++ சான்றிதழ் அவசியத்தைத் கருத்தில் கொண்டு மேற்படி பணியின் அவசியத்தைக் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு 18.05.2021 அன்று முதல்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எம் .சங்கர் ஒப்பந்தாரர் பரமக்குடி | 0.06% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்தாரர் பரமக்குடி. | 0.70% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.சங்கர் ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசியம் மற்றும் ODF++ சான்றிதழின் அத்தியாவசியத்தைக் கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1412, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்–25

இந்நகராட்சிக்குட்பட்ட பெருமாள் கோவில் படித்துறை மற்றும் அணுகுசாலை சந்திப்பு, ஜீவா நகர் , கிருஷ்த்துவ காலனி மற்றும் சி.எஸ்.எம். போர்டிங் ரோடு பகுதியில் உள்ள கழிப்பறைகள் பழுதடைந்து உள்ளதால் அவற்றை பயன்படுத்தும் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சிக்கு ODF++ சான்றிதழ் பெறுவதற்கு அனைத்து கழிப்பறைகளும் நல்ல நிலையில் இயங்கி வர வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே மேற்படி கழிப்பறைகளை ODF++ சான்று பெறும் பொருட்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொன்று வருவதற்குள் மேற்படி பழுது பணிகளை மேற்கொள்ள வேண்டும். என பொது சுகாதாரப்பிரிவினர் மூலம் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து மேற்படி கழிப்பறைகளில் ஏற்பட்டுள்ள பகுதிகளை சரி செய்ய ஏற்படும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.900000/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். மேற்படி தூய்மை இந்தியா திட்டத்தின் செயல்பாடுகளின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 18.05.2021 அன்று இதன்மூலமாக மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்தாரர் பரமக்குடி. | 0.05% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு.எம் .சங்கர் ஒப்பந்தாரர் பரமக்குடி | 0.50% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.சந்திரன்ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசியம் மற்றும் ODF++ சான்றிதழின் அத்தியாவசியத்தைக் கருத்தில்

| | |
|---|---|
| | கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1413, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–26 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளான 14வது நிதிக்கு ஆணைய பரிந்துரை நிதித்திட்டம் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் தொடர்பான சாலைப்பணிகளின் நேரடி ஆய்வின் போது வார்டு எண் 8 மற்றும் வார்டு எண் 36க்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் நீண்டகாலமாக மேம்படுத்தாமல இருக்கும் விடுபட்ட சாலைகளை புதுப்பித்து தருமாறு கோரியதைத் தொடர்ந்து மேற்படி பொது மக்கள் மழை காலங்களில் அப்பகுதியில் செல்வதற்கு மிகவும் சிரமம்படுவதைத் கருத்தில் கெகாண்டு உரிய மதிப்பீடுகள் கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>1. வார்டு எண்.8க்குட்பட்ட ஜீவா நகர் மற்றும் வி.பி.நகர் குறுக்குத் தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் மதிப்பீடு ரூ.10.00 லட்சம்<br>2. வார்டு எண்.36க்குட்பட்ட திருவரங்கம் சாலை குறுக்குத்தெரு மற்றும் முனியாண்டிபுரம் பகுதிகளில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் மதிப்பீடு ரூ.10.00 இலட்ம்<br>மேற்படி தயார் செய்யப்பட்டுள்ள பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டபப்டுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிகளை நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்.<br><br>**தீர்மானம் எண்.1414, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–27 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள உரப்புளி கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் மேற்கு நுழைவு வாயில் சிமிண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணிக்கு 25.02.2021ம் தேதி அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>1 \| திரு. எஸ்.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் \| 0.05% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு<br>2 \| திரு. எஸ்.சிவசுந்தரம், ஒப்பந்ததாரர் \| 0.80% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம்<br><br>**அலுவலகக்குறிப்பு** –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு..எஸ்.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>மேலும், மேற்காணும் பணி திட்டப்பணியின் தொடர்புடைய பணியாக இருப்பதால் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1415, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–28 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள உரப்புளி கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் கிழக்கு நுழைவு வாயில் சாலையில் சிமிண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணிக்கு 25.02.2021ம் தேதி அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும். |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>திரு. எஸ்.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரா்</td><td>0.05% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எஸ்.சிவசுந்தரம், ஒப்பந்ததாரா்</td><td>0.89% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம்</td></tr>
</table>
<br>
அலுவலகக்குறிப்பு –<br>
மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு..எஸ்.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரா் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>
மேலும், மேற்காணும் பணி திட்டப்பணியின் தொடா்புடைய பணியாக இருப்பதால் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிா் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<br>
தீா்மானம் எண்.1416, அனுமதிக்கப்பட்டது.
</td>
</tr>
<tr>
<td>பொருள்–29</td>
<td>
இந்நகராட்சிக்கு சொந்தமான உரப்புளி புல்பண்ணை வளாகத்தில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகா்ப்புற மேம்பாட்டு திட்டம் 2018-19-;ன் கீழ் ருபாய் 565.00 இலட்சத்திற்க்கு கசடு கழிவு நீா் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டு வருகிறது. மேற்படி பணி முடியும் தருவாயில் உள்ளது. (Feacel sludge Treatment Plant அமைக்க உரிய நிா்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் தொடா்ந்து நடைபெற்று வருகிறது மேற்கண்ட பணியை நேரடி ஆய்வு செய்ய வந்த மண்டல செயற்பொறியாளா் மதுரை அவா்கள் மேற்படி FSTP வளாகத்தில் உள்ள கசடு உலா்த்தும் பகுதிகளில் கழிவு நீா் வடிகட்டும் போது மேலடுக்கில் படியும் கழிவு மண்ணை அள்ளுவதற்கு ஏற்றவாறு மேலடுக்கில் Hallow Block கற்களால் கலப்படுகை ஒன்றை அமைக்க அறிவுறுத்தியதின்பேரில் மேற்படி பணியைச் செய்ய மன்ற அனுமதியை எதிா் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய 26.02.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பாா்வைக்கும், அனுமதிக்கும்.<br>
<br>
<table>
<tr><td>1</td><td>திரு.எஸ்.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரா்</td><td>0.08% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எஸ்.சிவசுந்தரம், ஒப்பந்ததாரா்</td><td>0.84% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>
1)மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ்.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரா் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.08% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>
2) மேலும், அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிா் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<br>
தீா்மானம் எண்.1417, அனுமதிக்கப்பட்டது.
</td>
</tr>
<tr>
<td>பொருள்–30</td>
<td>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீா் பராமரிப்பு பணிகள் செய்ய தேவையான பணியாளா்களை தற்காலிகமாக அமா்த்தும் பணிக்கு ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய தனிஅலுவலா் அவா்களின் முன் அனுமதி பெற்று 27.05.2020 ந்தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பாா்வைக்கும், அனுமதிக்கும்.
</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 1 | M/s M.S. Man Power Agencey, Paramakudi. | 0.01% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | M/s Exsernet, Madurai. | 0.73% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Man Power Agencey, Paramakudi கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.01% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும் குடிநீர் பராமரிப்பின் அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1418, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்–31

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகளை பராமரிப்பு செய்ய தேவையான பணியாளர்களை தற்காலிகமாக அமர்த்தும் பணிக்கு ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 27.05.2021 ந்தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | M/s M.S. Man Power Agencey, Paramakudi. | 0.01% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | M/s Exsernet, Madurai. | 0.73% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Man Power Agencey, Paramakudi கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.01% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும் தெருவிளக்கு பராமரிப்பின் அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1419, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்–32

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 36 வரையிலான பகுதிகளுக்கு காவேரி கூட்டுகுடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்களை கொண்டு குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் குழாய்களில் ஏற்படும் அதிக அழுத்தம் காரணமாகவும், கனரக போக்குவரத்தின் காரணமாகவும், மின் கம்பங்கள் ஊண்டுதல் மற்றும் கண்ணாடி குழாய் கேபிள்கள் பதிக்கும் போதும் குழாய்களில் வெடிப்புகள் மற்றும் உடைப்புகள் ஏற்படுகின்றன. மேலும் ஒரு சில குழாய்களில் உள்ளே வேர் புகுந்து அடைப்புகள் ஏற்படுகின்றன எனவே குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய ஏற்படும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 18.05.2021 அன்று முதல் முதலாக மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1 | திரு.பி.கோவிந்தன் ஒப்பந்தாரர் பரமக்குடி. | 0.05% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |

| | | |
|---|---|---|
| 2 | திரு.எம் .சங்கர் ஒப்பந்தாரர் பரமக்குடி | 0.60% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி..கோவிந்தன் ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் அத்தியாவசியத்தைக் கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1420, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்–33

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களின் இதர பல தேவைகளுக்காக சுமார் 168 எண்ணம் சிறு மின் விசை பம்புடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகள் மூலம் குடிநீர் பெறப்பட்டு வருகிறது. பொது மக்களின் அன்றாட மற்றும் அதிக அளவு பயன்பாடு மற்றும் காலி நிலைக்கு ஏற்றவாறு சிறு மின் விசைப்பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் மோட்டார்கள் பகுதி, பேனல் போர்டு பகுதி, சின்டெக்ஸ் தொட்டி பழுது உள்ளீட்ட ஏனைய மோட்டார் மற்றும் வயரிங் பகுதிகளை சரி செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே வார்டு எண். 1 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் சிறு மின் விசைப்பம்புகளில் ஏற்படக்கூடிய பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 லட்சம் மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 18.05.2021 அன்று முதல் முதலாக மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்தாரர் பரமக்குடி. | 0.05% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு.எம் .சங்கர் ஒப்பந்தாரர் பரமக்குடி | 0.60% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ்.சந்திரன் ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1421, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்–34

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களின் இதர பல தேவைகளுக்காக சுமார் 168 எண்ணம் சிறு மின் விசை பம்புடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகள் மூலம் குடிநீர் பெறப்பட்டு வருகிறது. பொது மக்களின் அன்றாட மற்றும் அதிக அளவு பயன்பாடு மற்றும் காலி நிலைக்கு ஏற்றவாறு சிறு மின் விசைப்பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் மோட்டார்கள் பகுதி, பேனல் போர்டு பகுதி, சின்டெக்ஸ் தொட்டி பழுது உள்ளீட்ட ஏனைய மோட்டார் மற்றும் வயரிங் பகுதிகளை சரி செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே வார்டு எண். 19 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் சிறு மின் விசைப்பம்புகளில் ஏற்படக்கூடிய பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 லட்சம் மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 18.05.2021 அன்று முதல் முதலாக மேற்படி பணிக்கு

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எம் .சங்கர் ஒப்பந்தாரர் பரமக்குடி | 0.05% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்தாரர் பரமக்குடி. | 0.60% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம்.சங்கர் ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1422, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்–35

இந்நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு குத்தகை இனங்களுக்கு 2021–2024ம் ஆண்டுகளுக்கு 18.02.2021ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில், ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் மட்டும் கீழ்க்கண்ட விபரத்தின்படி ஏலதாரர்கள் கலந்து கொண்டு ஏலக்கேள்வி கேட்டவர்களின் உச்ச ஏலக்கேள்வி தொகையினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனங்களின் விபரம் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் | பொது ஏலக் கேள்வி | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | அனைத்து தெரு ஓரங்களில் விற்பனை செய்யும் வியாபாரிகளில் வசூல் செய்யும் உரிமம் | 1.திரு.மு.நாகேந்திரன்<br>2.திரு.பி.சசிவர்ணம்<br>3.திரு.ஏ.கே.சுரேஷ்<br>4.திரு.இ.நூர்ஜியாவுதீன் | 0<br>610000<br>0<br>0 | 609800<br>0<br>609950<br>60985 |
| 2. | சின்னக்கடை தெரு ஓரம் வியாபாரிகளின் வசூல் செய்யும் உரிமம் | 1.திரு.எஸ்.ஆர்.தங்கவேல்<br>2.திரு.க.முருகேசன்<br>3.திரு.பி.சசிவர்ணம்<br>4.திரு.ஏ.கே.சுரேஷ் | 0<br>0<br>186500<br>0 | 180000<br>186000<br>0<br>185000 |
| 3. | வாரச்சந்தையில் நுழைவுக்கட்டணம் வசூல் செய்தல் மற்றும் சந்தையில் சேரும் மாட்டு சாணத்தை அப்புரப்படுத்தும் உரிமம் | 1.திரு.எம்.நாகேந்திரன்<br>2.திருமதி.ஏ.யசோதையம்மாள் | 0<br>1470000 | 1465000 |
| 4. | எமனேஸ்வரம் தெரு ஓரங்களில் விற்பனை செய்யும் வியாபாரிகளிடம் வசூல் செய்யும் உரிமம் | 1.திரு.க.முருகேசன்<br>2.திரு.கே.ஏ.பாண்த்துரை<br>3.திரு.எம்.சக்திவேல்<br>4.திரு.மூசாக்கனி | 0<br>145000<br>0<br>0 | 144000<br>0<br>144500<br>144600 |
| 5. | சி.எஸ்.எம் போர்டிங் சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆடடிச்சாலையில் வதை செய்யப்படும் ஆடுகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1.திரு.எஸ்.சந்திரன்<br>2.திரு.கருப்பணன் | 215000<br>0 | 0<br>214000 |
| 6. | நகராட்சி அண்ணா பேருந்து | ஏலத்தில் கலந்து கொள்ள | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலையத்தில் அனைத்து தனியார் மற்றும் அரசு பஸ்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | யாரும் முன்வரவில்லை | | |
| 7. | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1.திரு.வி.கருப்பணன்<br>2.திரு.எஸ்.சந்திரன் | 500000<br>0 | 0<br>49500 |
| 8. | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1.திரு.கே.நடராஜன்<br>2.திரு.வி.சத்தியமூர்த்தி | 500000<br>0 | 0<br>49900 |
| 9. | நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் பழம், பூ மற்றும் திண்பண்டங்கள் தட்டில் வைத்து விற்பனை செய்யும் உரிமம் | 1.திரு.கே.ஏ.பாண்டித்துறை<br>2.திரு.வி.கருப்பணன் | 247000<br>0 | 0<br>24500 |

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு பொது ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரர்களின் உச்ச ஏலக்கேள்வி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1423, அனுமதிக்கப்பட்டது.**

தனிஅலுவலர்(பொ)
பரமக்குடி நகராட்சி.